भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புது தில்லி, 20 அக்டோபர் 1998*

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பமாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1882 (2/1882), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்ட முரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 74.00

# தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், 1931

*(சட்ட எண் 16/1931)*[1]

[*1931, செப்டம்பர் 28*]

*சுங்கம் அல்லது ஆயத் தீர்வைகளை விதித்தல் அல்லது உயர்த்துதல் தொடர்பான சட்டமுன்வடிவுகளிலுள்ள வகையங்களை வரையறுக்கப்பட்ட கால அளவுக்கு உடனடியாக செல்திறம் பெறச் செய்வதற்கு வகைசெய்கின்ற சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.*

*சுங்கம் அல்லது ஆயத் தீர்வைகளை விதித்தல் அல்லது உயர்த்துதல் தொடர்பான சட்டமுன்வடிவுகளிலுள்ள வகையங்களை வரையறுக்கப்பட்ட கால அளவுக்கு உடனடியாக செல்திறம் பெறச் செய்வதற்கு வகைசெய்கின்ற சட்டத்தைத் திருத்துவது உகந்ததாய் இருப்பதால்,* ஈங்கிதனால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:-

குறுந்தலைப்பு.

*1.* இந்தச் சட்டம், தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் சட்டம், *1931* என்று வழங்கப்பெறும்.

பொருள் வரையறைகள்.

*2.* இந்தச் சட்டத்தில், "விளம்பப்பட்ட வகையம்" என்பது, பிரிவு 3இன்படி எந்த சட்டமுன்வடிவு ஒன்றைப் பொறுத்து விளம்புகை ஒன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த சட்டமுன்வடிவிலுள்ள ஒரு வடிவம் என்று பொருள்படும்.

இந்தச் சட்டத்தின்படி விளம்புகைகளைச் செய்வதற்கான அதிகாரம்.

*3.* அரசாங்கத்தின் சார்பாக [2][நாடாளுமன்றத்]தில் கொணரப்படுமாறுள்ள ஒரு சட்டமுன்வடிவு, சுங்கம் அல்லது ஆயத்தீர்வை ஒன்றை விதிப்பதற்கு அல்லது உயர்த்துவதற்கு வகைசெய்கிறவிடத்து, [3][மைய அரசாங்கம்] அந்தச் சட்டமுன்வடிவில் அவ்வாறு விதிப்பது அல்லது உயர்த்துவது பொறுத்து அந்தச் சட்டமுன்வடிவிலுள்ள வகையம் எதனையும், இந்தச் சட்டத்தின்படி உடனடியாகச் செல்திறம் பெறச் செய்வது பொதுமக்களின் நலன் கருதி உகந்ததாகயிருக்கிறது என்ற விளம்புகை ஒன்று புகுத்தப்படுமாறு செய்யலாம்.

இந்தச் சட்டத்தின்படியான விளம்புகைகளின் விளைவும் அவற்றின் கால நீட்சியும்.

*4. (1)* விளம்பப்பட்ட வகையம் ஒன்று, அதை உள்ளடக்கியிருக்கின்ற சட்டமுன்வடிவு கொணரப்படுகிற நாளிலிருந்து உடனடியாக சட்டச் செல்லாற்றல் உடையது ஆகும்.

*(2)* விளம்புகை செய்யப்பட்ட வகையம் ஒன்று—

*(அ)* திருத்தத்துடன் அல்லது இல்லாமல் ஒரு செய்சட்டமாக அது செயற்பாட்டிற்கு வருகிறபோது, அல்லது

*(ஆ)* [4][மைய அரசாங்கம்] [5]*** [2][நாடாளுமன்றத்]தால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தையொட்டி, [4][அதிகாரமுறை அரசிதழில்] அறிவிக்கை வாயிலாக, அது சட்டச்செல்லாற்றம் அற்றுப்போகும் என்று பணிக்கிறபோது, அல்லது

---

*1.* நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக *1931* இந்திய அரசிதழ் பகுதி V, பக்கம் *110*ஐப் பார்க்கவும்.

*2.* சட்டங்கள் இணக்க ஆணை, *1950*ஆல் "மையச் சட்டமன்றம்" என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது *(26-1-1950)*.

*3.* இணக்க ஆணை, *1937*ஆல் "மன்றத்தமர் ஆளுநர்-தலைவர்" என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

*4.* இணக்க ஆணை, *1937*ஆல் "மன்றத்தமர் ஆளுநர்-தலைவர்" மற்றும் "அதிகாரமுறை அரசிதழ்" என்ற சொற்களுக்கு மாற்றாகஅமைக்கப்பட்டது.

*5.* "ஈரவைகளில் ஒன்று," என்ற சொற்கள் இந்தியச் சுதந்திர (மையச் சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள் இணக்க) ஆணை *1948* ஆல் விட்டுவிடப்பட்டது.

(இ) கூறு (அ) இன் அல்லது கூறு (ஆ) இன்படி அது ஏற்கெனவே சட்டச்செல்லாற்றல் அற்றுப்போனதாக இல்லை எனில், அப்போது, அதனைக் கொண்டிருக்கின்ற சட்டமுன்வடிவு கொணரப்பட்ட நாளுக்குப் பின்பு [1][எழுபத்தைந்தாம் நாள்] கழிவுறுவதன் பேரில்,

இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி சட்டச் செல்லாற்றல் அற்றுப்போனதாகும்.

விளம்புகைகள் செயற்பாடற்றுப் போகின்றபோது குறிப்பிட்ட தொகைகள் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

5. (1) விளம்பப்பட்ட வகையத்தைக் கொண்டிருக்கின்ற சட்டமுன்வடிவு கொணரப்பட்ட நாளுக்குப் பின்பு [1][எழுபத்தைந்தாம் நாள்] கழிவுறுவதற்கு முன்பு திருத்தப்பட்ட வடிவத்தில் ஒரு செய்சட்டமாக செயற்பாட்டிற்கு வருகிறவிடத்து, செய்சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையம் விளம்பப்பட்ட வகையமாக இருந்திருந்தால், எந்தத் தீர்வைகள் ஈட்டப்பட்டிராதோ அந்தத் தீர்வைகள் அனைத்தும் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:—** இந்த உட்பிரிவின்படி திருப்பிக் கொடுக்கப்படலாகும் ஏதேனும் தீர்வையின் வீதமானது, விளம்பப்பட்ட வகையத்தில் கருதப்பட்ட தீர்வையின் வீதத்துக்கும் அந்தச் சட்டமுன்வடிவு கொணரப்பட்டபோது நடைமுறையில் இருந்த தீர்வையின் வீதத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டிற்கு மேற்படுதல் ஆகாது.

(2) விளம்பப்பட்ட வகையம் ஒன்று பிரிவு 4இன் உட்பிரிவு (2) இன் கூறு (அ) அல்லது கூறு (இ) இன்படி சட்டச் செல்லாற்றல் கொண்டிருப்பது அற்றுப்போகிறவிடத்து, அதைப் பொறுத்த விளம்புகை செய்யப்பட்டிராதிருப்பின், ஈட்டப்பட்டிருக்கக் கூடியதல்லாத தீர்வைகள் அனைத்தும் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

6. [நீக்கறவு.] நீக்கறவு செய்தல் சட்டம், 1938இன் பிரிவு 2 மற்றும் இணைப்புப்பட்டியலால் நீக்கறவு செய்யப்பட்டது.

---

1. தாற்காலிகமாக வரிகள் ஈட்டுதல் (திருத்தம்) சட்டம், 1964இன் (45/1964) பிரிவு 2ஆல் "அறுபதாம் நாள்" என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது (1-2-1965).